# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

**Case No. CC.No. 15 of 2024**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : முருகன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(A2 Present. A1 absent. Petition filed u/s. 317 Crpc and allowed)**

**Dated.17.04.2026**

**முதல் விசாரணை**

நான் தத்தமங்கலத்தில் வசித்து வந்து அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை. காலை 6 மணியளவில் மண்ணச்சநல்லூரிலிருந்து எதுமலை ரோட்டில் நடைப்பயிற்சி சென்றுவிட்டு திரும்ப எதுமலையிலிருந்து மண்ணச்சநல்லூர் செல்லும் சாலையில் வடக்கு தத்தமங்கலம் பெரியாண்டார் கோவில் எதிர்புறம் பாலக்கட்டை அருகே நான் நடந்து வந்து கொண்டிருக்கும் போது, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் என்னை கீழே தள்ளி நான் எனது சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்திருந்த ஐபோனை பறித்துக் கொண்டு சென்றுவிட்டார். காணாமல் போன எனது ஐபோனின் மதிப்பு சுமார் ரூ.50000/- இருக்கும். அதன்பிறகு சிறுகனூர் காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள

கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். அதன்பிறகு 1 மாதம் கழித்து எனது செல்போன் கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொன்னார்கள். அதன்பேரில் காவல் நிலையம் சென்று எனது ஐபோனை அடையாளம் காட்டினேன். எனது ஐபோனை பறித்து சென்றவர் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலாது. ஆஜரில் உள்ள 2ம் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

நான் செல்போன் காணாமல் போன பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்றேன் என்றால் சுமார் 1 மாதம் கழித்து சென்றேன். நான் ஊர் திருவிழாவிற்கு அனுமதி வாங்குவதற்காக காவல் நிலையம் சென்றேன். அப்போது தான் எனது செல்போன் காணாமல் போனது என போலீசாரிடம் சொன்னேன். அப்போது ஒரு நபர் தான் என்னை தாக்கிவிட்டு செல்போனை எடுத்து சென்றதாக சொன்னேன் என்றால் சரிதான். புகாரை போலீசார் எழுதி கொண்டு, என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. புகாரில் 2 நபர்கள் என குறிப்பிட்டிருந்தால் அது நான் கொடுத்த புகார் இல்லை என்றால் சரிதான். நான் புகாரில் கையொப்பம் செய்த பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.04.17 17:44:24 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 15 of 2024**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிரகாஷ் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(A2 Present. A1 absent. Petition filed u/s. 317 Crpc and allowed)**

**Dated.17.04.2026**

**முதல் விசாரணை**

நான் தத்தமங்கலத்தில் வசித்து வந்து Truck ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை. மாலை சுமார் 8 மணியளவில் நான் வயலுக்கு சென்றுவிட்டு திரும்ப வந்து கொண்டிருக்கும் போது மேற்படி கையெழுத்தை போட்டுக் கொடுத்தேன். திருட்டு நடந்ததாக சொல்லி போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டனர். அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2/அ.சா.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 24.03.2024ம் தேதி காலை சுமார் 6.45 மணியளவில் முருகன் என்பவருடன் நடந்து சென்று கொண்டிருக்கும் போது பெரியாண்டார் கோவில் எதிரில் பல்சர் வாகனத்தில் வந்த 2 பேர் அ.சா.1 டமிருந்து ஆப்பிள் ஐபோனை திருடி பறித்து சென்றார்கள் என்றால் தெரியாது. இதுசம்மந்தமாக மதியம் 12.30 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், வினோத் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.04.17 17:44:36 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி